# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண்.166/2015

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | சுப்ரமணி | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | பச்சமுத்து | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 64 | நாள் | .. | 15.06.2026 |
| கிராமம் | .. | கன்னந்தேரி | | | |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15-ஆம் நாள் திங்கள்கிழமை என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திருமதி. இரா.இளமதி மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். நான் இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1-ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1. 07.12.2012 தேதியிட்ட 2ம் பிரதிவாதியால் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் பதிவு நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.10.06.2015 தேதியிட்ட 3ம் பிரதிவாதியாகிய எனது பெயருக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவு நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது

3.தாவா சர்வே எண்ணிற்கான புல எண்.15ற்கான புல வரைபடத்தின் நகல் வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது

4.16.10.2023 தேதியிட்ட பட்டா எண்.1133ன் இணைய வழி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறதுது

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.06.15 15:25:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.